ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமதே கூரேஶாயநம:
ஸ்ரீ தாஶரதி மஹாகுரவே நம: ஸ்ரீமத் வரவர முநயே நம:
ஸ்ரீ வானாத்ரி யோகிநே நம: ஸ்ரீ வேங்கட குரவே நம:
அண்ணாவிலப்பன் திருவடிகளே சரணம்

## ஸ்ரீ முதலியாண்டான் ஸ்வாமி திருமாளிகை




# ஆசாரியர்கள் வாழி திருநாமம்

**ஸ்ரீ முதலியாண்டான் ஸ்வாமி தனியன்**

பாதுகே யதிராஜஸ்ய கதயந்தி யதாக்யயா |
தஸ்ய தாஶரதே: பாதௌ ஶிரஸா தாரயாம்யஹம் ||

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:　　ஸ்ரீமதே கூரேஶாயநம:
ஸ்ரீ தாஶரதி மஹாகுரவே நம:　　ஸ்ரீமத் வரவர முநயே நம:
ஸ்ரீ வானாத்ரி யோகிநே நம:　　ஸ்ரீ வேங்கட குரவே நம:
அண்ணாவிலப்பன் திருவடிகளே சரணம்

## ஸ்ரீ முதலியாண்டான் ஸ்வாமி திருமாளிகை

## வர்தமான ஸ்வாமி ஸ்ரீ உ.வே.கோ.க.வா.அ. குமார ராமாநுஜாசார்யர்



### வர்த்தமான ஸ்வாமி தனியன்

ஸ்ரீமத் வதூல குல வாரிதி பூர்ண சந்த்ரம்
வாதூல வேங்கட குரூத்தம புத்ர ரத்நம் |
ஸ்ரீஶைல தேஶிக க்ருபாப்த ஸமஸ்த போதம்
ராமாநுஜார்ய குருவர்ய மஹம் ப்ரபத்யே ||

ஸ்ரீவேங்கடார்ய தநயம் தத்பாத கமலாஶ்ரயம் |
வாதூலாந்வய பூர்ணேந்தும் ராமாநுஜ குரும் பஜே ||

| | |
|---|---|
| **Swami Mudaliandan Thirumaligai**<br>4/345, Sannadhi Street,<br>**Singaperumal Koil**,<br>Chenglpet District,<br>Tamil Nadu, India. PIN 603 204 | **Swami Mudaliandan Thirumaligai**<br>73, East Chithra St,<br>**Srirangam**, Trichy,<br>Tamil Nadu, India. PIN 620 006 |
| **Swami Mudaliandan Thirumaligai**<br>51, Sannadhi Street,<br>**Kancheepuram**,<br>Tamil Nadu, India. Pin 631 501 | **Swami Mudaliandan Thirumaligai**<br>**Thirunarayanapuram**,<br>Karnataka, India. PIN 571 431 |
| **Swami Mudaliandan Thirumaligai**<br>Next to Theerthavaari Mandapam,<br>Vaazhai Kulam Street,<br>**Srivilliputhur**,<br>Tamil Nadu, India. PIN 626 125 | **Swami Mudaliandan Thirumaligai**<br>Sannadhi Street,<br>**Kooram**10 KM from Kancheepuram,<br>Tamil Nadu, India. PIN 631 558 |

**E Mail:** sridasarathy@gmail.com, acharya@mudaliandan.com
**Website:** www.mudaliandan.com
**Phone:** 91711 12050 , 96294 18994

ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:        ஸ்ரீமதே கூரேஶாயநம:
ஸ்ரீ தாஶரதி மஹாகுரவே நம:        ஸ்ரீமத் வரவர முநயே நம:
ஸ்ரீ வானாத்ரி யோகிநே நம:        ஸ்ரீ வேங்கட குரவே நம:
அண்ணாவிலப்பன் திருவடிகளே சரணம்

ஓராண்வழி

# ஆசாரியர்கள் வாழி திருநாமம்

## பெரிய பெருமாள்

திருமகளும் மண்மகளும் சிறக்க வந்◌ோதான் வாழியே
செய்யவிடைத் தாய் மகளார் சேவிப்போன் வாழியே
இரு விசும்பில் வீற்றிருக்கும் இமையவர் கோன் வாழியே
இடர் கடியப் பாற்கடலை எய்தினான் வாழியே
அரிய தயரதன் மகனாய் அவதரித்தான் வாழியே
அந்தரியாமித்துவமும் ஆயினான் வாழியே
பெருகி வரும் பொன்னி நடுப்பின் துயின்றான் வாழியே
பெரிய பெருமாள் எங்கள் பிரான் அடிகள் வாழியே

## பெரிய பிராட்டி

பங்கையப் பூவில் பிறந்த பாவை நல்லாள் வாழியே
பங்குனியில் உத்தர நாள் பார் உதித்தாள் வாழியே
மங்கையர்கள் திலகம் என வந்த செல்வி வாழியே
மால் அரங்கர் மணி மார்பை மன்னுமவள் வாழியே
எங்கள் எழிற் சேனை மன்னர்க்கு இதம் உைரத்தாள் வாழியே
இருபத்தஞ்சு உட்பொருள் மால் இயம்புவள் வாழியே
செங்கமலச் செய்யரங்கம் செழிக்க வந்தாள் வாழியே
சீரங்க நாயகியார் திருவடிகள் வாழியே

## சேனைமுதலியார்

ஓங்கு துலாப் பூராடத்து உதித்த செல்வன் வாழியே
ஒண்டொடியாள் சூத்ரவதி உறைமார்பன் வாழியே

ஈங்குலகில் சடேகாபற்க்கு இதமுறைத்தான் வாழியே
எழிற்பிரம்பின் செங்கோலை ஏந்துமவன் வாழியே
பாங்குடன் முப்பத்து மூவர் பணியுமவன் வாழியே
பங்கயத்தாள் திருவடியைப் பற்றினான் வாழியே
தேங்கு புகழ் அரங்கைரேய சிந்தை செய்வோன் வாழியே
சேனையர்கோன் செங்கமலத் திருவடிகள் வாழியே

## நம்மாழ்வார்

மேதினியில் வைகாசி விசாகத்தோன் வாழியே
வேதத்தைச் செந்தமிழால் விரித்துரைத்தான் வாழியே
ஆதி குருவாய் அம்புவியில் அவதரித்தோன் வாழியே
அனவரதம் சேனையர் கோன் அடி தொழுவான் வாழியே
நாதனுக்கு நாலாயிரம் உரைத்தான் வாழியே
நன்மதுரகவி வணங்கும் நாவீறன் வாழியே
மாதவன் பொற்பாகையாய் வளர்ந்தருள்வோன் வாழியே
மகிழ் மாறன் சடேகாபன் வையகத்தில் வாழியே

## ஸ்ரீமந் நாதமுனிகள்

ஆனிதனில் அனுடத்தில் அவதரித்தான் வாழியே
ஆளவந்தார்க்கு உபேதசம் அருளிவைத்தான் வாழியே
பானு தெற்கில் கண்டவன் சொற்பல உரைத்தான் வாழியே
பராங்குசனார் சொற்பிரபந்தம் பரிந்து கற்றான் வாழியே
கானமுறத் தளத்திற் கண்டிசைத்தான் வாழியே
கருணையினால் உபேதச கதியளித்தான் வாழியே
நானிலத்தில் குருவரைய நாட்டினான் வாழியே
நலந்திகழும் நாதமுனி நற்பதங்கள் வாழியே

## உய்யக்கொண்டார்

வாலவெய்யோன் தனைவென்ற வடிவழகன் வாழியே
மால் மணக்கால் நம்பி தொழும் மலப்பதத்தோன் வாழியே
சீலமிகு நாதமுனி சீருரைப்போன் வாழியே
சித்திரையில் கார்த்திகை நாள் சிறக்க வந்தோன் வாழியே
நாலிரண்டும் ஐயைந்தும் நமக்குரைத்தான் வாழியே
நாலெட்டின் உட்பொருளை நடத்தினான் வாழியே

மால் அரங்க மணவாளர் வளம் உரைப்போன் வாழியே
வையம் உய்யக் கொண்டவர் தாள் வையகத்தில் வாழியே

## மணக்கால் நம்பி

தேசம் உய்யக்கொண்டவர் தாள் சென்னிவைப்போன் வாழியே
தென்னரங்கர் சீரருளைச் சேர்ந்திருப்போன் வாழியே
தாசரதி திருநாமம் தழைக்க வந்தோன் வாழியே
தமிழ்நாதமுனி உகப்பைத் தாபித்தான் வாழியே
நேசமுடன் ஆரியனை நியமித்தான் வாழியே
நீணிலத்தில் பதின்மர்கலை நிறுத்தினான் வாழியே
மாசி மகம் தனில் விளங்க வந்துதித்தான் வாழியே
மால் மணக்கால் நம்பி பதம் வையகத்தில் வாழியே

## ஸ்ரீ ஆளவந்தார்

மச்சணியும் மதிளரங்கம் வாழ்வித்தான் வாழியே
மறை நான்கும் ஓருருவில் மகிழ்ந்து கற்றான் வாழியே
பச்சையிட்ட ராமர் பதம் பகருமவன் வாழியே
பாடியத்தோன் ஈடேறப் பார்வை செய்தோன் வாழியே
கச்சிநகர் மாயன் இரு கழல் பணிந்தோன் வாழியே
கடக உத்தராடத்துக் காலுதித்தான் வாழியே
அச்சமற மனமகிழ்ச்சி அணைந்திட்டான் வாழியே
ஆளவந்தார் தாளிணைகள் அனவரதம் வாழியே

## பெரியநம்பிகள்

அம்புவியில் பதின்மர்கலை ஆய்ந்துரைப்போன் வாழியே
ஆளவந்தார் தாளிணையை அடைந்து உய்ந்தோன் வாழியே
உம்பர் தொழும் அரங்கேசர்க்கு உகப்புடையோன் வாழியே
ஓங்குதனுக் கேட்டை தனில் உதித்தபிரான் வாழியே
வம்பவிழ்தார் வரதருரை வாழிசெய்தான் வாழியே
மாறேனர்நம்பிக்கு வாழ்வளித்தான் வாழியே
எம்பெருமானார் முனிவர்க்கு இத்தமுரைத்தான் வாழியே
எழில் பெரிய நம்பி சரண் இனி தூழி வாழியே

## திருக்கச்சிநம்பிகள்

மருவாரும் திருமல்லி வாழவந்தோன் வாழியே
    மாசி மிருகசீரிடத்தில் வந்துதித்தான் வாழியே
அருளாளருடன் மொழி சொல் அதிசயத்தோன் வாழியே
    ஆறுமொழி பூதூராரர்க்கு அளித்தபிரான் வாழியே
திருவால் வட்டம் செய்து சேவிப்போன் வாழியே
    தேவராச அட்டகத்தைச் செப்புமவன் வாழியே
தெருளாரும் ஆளவந்தார் திருவடியோன் வாழியே
  திருக்கச்சி நம்பி இரு திருவடிகள் வாழியே

## எம்பெருமானார்

அத்திகிரியருளாளரடி பணிந்தோன் வாழியே
    அருட்கச்சி நம்பியுரையாறு பெற்றோன் வாழியே
பத்தியுடன் பாடியத்தைப் பகர்ந்திட்டான் வாழியே
    பதின்மர் கலையுட்பொருளைப் பரிந்துகற்றான் வாழியே
சுத்தமகிழ் மாறனடி தொழுதுய்ந்தோன் வாழியே
    தொல் பெரிய நம்பி சரண் தோன்றினான் வாழியே
சித்திரையிலாதிரை நாள் சிறக்கவந்தோன் வாழியே
    சீர்பெரும்பூதூர் முனிவன் திருவடிகள் வாழியே

எண்டிசையெணிளையாழ்வார் எதிராசன் வாழியே
    எழுபத்து நால்வர்க்கெண்ணான்கு உரைத்தான் வாழியே
பண்டைமறையைத் தெரிந்த பாடியத்தோன் வாழியே
    பரகாலனடியிணையைப் பரவுமவன் வாழியே
தண்டமிழ் நூல் நம்மாழ்வார் சரணானான் வாழியே
    தாரணியும் விண்ணுலகும் தானுடையோன் வாழியே
தெண்டிரைசூழ் பூதூரெம்பெருமானார் வாழியே
    சித்திரையிற் செய்ய திருவாதிரையோன் வாழியே

## மணவாளமாமுனிகள் அருளிச் செய்த எம்பெருமானார் வாழித்திருநாமங்கள்

சீராரும் எதிராசர் திருவடிகள் வாழி
    திருவரையிற் சாத்திய செந்துவராடை வாழி
எராரும் செய்யவடிவு எப்பொழுதும் வாழி
    இலங்கிய முந்நூல்வாழி யிணைத்தோள்கள் வாழி

சோராத துய்யசெய்ய முகச்சோதி வாழி
தூமுறுவல்வாழி துணைமலர்க்கண்கள் வாழி
ஈராறு திருநாமம் அணிந்த எழில் வாழி
இனிதிருப்போடு எழில் ஞானமுத்திரை வாழியே

அறுசமயக் செடியதனை யடியறுத்தான் வாழியே
அடர்ந்துவரும் குதிட்டிகளை யறத்துறந்தான் வாழியே
செறுகலியைச் சிறிதுமறத் தீர்த்துவிட்டான் வாழியே
தென்னரங்கர் செல்வம் முற்றும் திருதிவைத்தான் வாழியே
மறையதனின் பொருளனைத்தும் வாய்மொழிந்தான் வாழியே
மாறனுரைசெய்த தமிழ்மறை வளர்த்தோன் வாழியே
அறமிகு நற்பெரும்பூதூ ரவதரித்தான் வாழியே
அழகாருமெதிராசர் அட்யிணைகள் வாழியே

## திருநாள் பாட்டு

சங்கரபாற்கர யாதவபாட்டப் பிரபாகரர் தங்கள்மதம்
சாய்வுறவாதியர் மாய்குவரென்று சதுமறை வாழ்ந்திடுநாள்
வெங்கலி யிங்கினி வீறுநமக்கிலை யென்று மிகத்தளர்நாள்
மேதினி நஞ்சுமை யாறுமெனத் துயர்விட்டு விளங்கியநாள்
மங்கையராளி பராங்குசமுன்னவர் வாழ்வு முளைத்திடுநாள்
மன்னிய தென்னரங்காபுரி மாமலை மற்றுமுவந்திடுநாள்
செங்கயல்வாவிகள் சூழ்வயல்நாளும் சிற்ந்தபெரும்பூதூர்ச்
சீமானிளையாழ்வார் வந்தருளியநாள் திர்வாதிரைநாளே

**** ஸ்ரீமந் மஹாபூதபுரே ஸ்ரீமத் கேஶவ யஜ்வந: |
காந்திமத்யாம் ப்ரஸூதாய யதிராஜாய மங்களம் ||

## கூரத்தாழ்வான்

சீராரும் திருப்பதிகள் சிறக்க வந்தோன் வாழியே
தென்னரங்கர் சீரருளைச் சேருமவன் வாழியே
பாராரும் எதிராசர் பதம் பணிந்தோன் வாழியே
பாடியத்தின் உட்பொருளைப் பகருமவன் வாழியே
நாராயணன் சமயம் நாட்டினான் வாழியே
நாலூரான் தனக்கு முத்தி நல்கினான் வாழியே

ஏராரும் தையில் அத்தத்தில் இங்கு வந்தான் வாழியே
எழில் கூரத்தாழ்வான்தன் இணையடிகள் வாழியே

பொருள் விரிக்கும் எதிராசன் பொன்னடியோன் வாழியே
பொன்வட்டில் பறித்தெறிந்த புகழுடையோன் வாழியே
மருள்விரிக்கும் முக்குறும்பை மாற்றவந்தோன் வாழியே
மயர்வறவே மெய்ஞ்ஞானம் வளர்த்திட்டான் வாழியே
இருள்விரிக்கும் சிவமில்லையென்றெழுத்திட்டான் வாழியே
ஏதமற எவ்வுயிர்க்கும் இதமளிப்போன் வாழியே
அருள்விரிக்கும் அரங்கேசர் அடிதொழுவோன் வாழியே
ஆனபுகழ் கூரத்தாழ்வான்தன் அடியிணைகள் வாழியே

## திருநாள் பாட்டு

மட்டவிழும் பொழில்சூழ் கூரேசர் மறைப்பொருள் வாழ்ந்திடுநாள்
மண்ணுலகில் சீர்பாடியம் விளங்கிட வந்து பிறந்தவர் நாள்
எட்டுமிரண்டும் இசைந்த தவங்கள் ஈந்திட வந்தவர் நாள்
இல்லையினிச் சிவமென் றெதிரிட்டெழுத்திட வந்து பிறந்தவர் நாள்
துட்ட குதிட்டிகள் மாயார்கள் வரவு துணித்திட வந்தவர் நாள்
சூரிய பூமியில் ஆரியர் என்று உதித்திட வந்தவர் நாள்
அட்டதிசைக்கும் நிறைந்த பெரும்புகழ் (அந்தணர் வாழ்)
கூரத்தாழ்வான் வந்தருளியநாள் தையில் விளங்கிடும் அத்தத்
திருநாளே

**** ஸ்ரீவத்ஸசிஹ்ந மிரேப் யோ நம உக்திம் அதீமஹி |
யதுக்தயஸ் த்ரயீகண்டே யாந்தி மங்கள ஸூத்ரதாம் ||

## முதலியாண்டான்

சித்திரையில் புனர்பூசம் சிரக்கவந்தோன் வாழியே
சீரங்கராசரடி சிந்தை செய்வோன் வாழியே
பத்தியுடன் பதின்மர்கலை பருந்தளிப்போன் வாழியே
பாதுகையை யதிபதிதாள் பதிக்குமவன் வாழியே
முத்திதரும் எட்டெழுத்தை மொழிந்தருளுவோன் வாழியே
முக்கோலும் எதிராசர் மொழிப் பெற்றோன் வாழியே
தத்துவநூல் பாடியத்தை தரித்துரைப்போன் வாழியே
தாசரதி உபயமலர் தாளிணைகள் வாழியே

அத்திகிரி அருளாளர் அடிபணிந்தோன் வாழியே
அனவரதன் எதிராசர் அடிதொழுவோன் வாழியே
சித்திரையில் புனர்வசுநாள் சிரக்கவந்தோன் வாழியே
சீபாடிய செழும்பொருளை செப்புமவன் வாழியே
பச்சை வாரணம் விலங்க பார்வை செய்தான் வாழியே
பரகாலன் அடியினைகள் பரமுவான் வாழியே
உத்தம வாதூலகுல முகந்துதித்தான் வாழியே
உய்யன் துணை முதலியாண்டான் ஒண்பதமிரண்டும் வாழியே

அத்திகிரி அருளாளர் அருள்பெருவோன் வாழியே
அருட் பச்சைவாரணத்தில் அவதரித்தான் வாழியே
சித்திரையில் புணர்பூசம் சிறக்கவந்தோன் வாழியே
சீபாடியம் ஈடு முதல் சீர்பெறுவோன் வாழியே
உத்தமமாம் வாதூலம் உயரவந்தோன் வாழியே
ஊர் திருந்தச் சீர்பாத மூன்றினான் வாழியே
முத்திரையும் செங்கோலும் முடிபெறுவோன் வாழியே
முதலியாண்டான் பொற்பதங்கள் ஊழிதொறும் வாழியே

## திருநாள் பாட்டு

எட்டுமிரண்டுடனே தமிழ் வேதமோதியுணர்ந்திடுநாள்
எங்குமிடர்கெட அங்கமுபாங்கமும் ஓங்கியுயர்ந்திடு நாள்
மட்டவிழும் பொழில்மன்னும் அரங்கர்தம் செங்கோல் சிறந்திடுநாள்
மாகுடபாலைந்து நாரணனார்பதி வாழ்வு பொலிந்திடுநாள்
இட்டமுயர்ந்தெதிராசருடன் மறைமுப்புரியூட்டிய நாள்
என் மறுமான் என்றிவர் பதமும் தண்டமுமாக்கிக் கொண்டருள் நாள்
சிட்டர்மகிழ்ந்திட தாசரதிக்குரு போந்து பிறந்தருள் நாள்
சித்திரையில் புனர்பூசமதாகிய செல்வம் மகிழ்ந்திடு நாளே.

## திருவரங்கத்தமுதனார்

எந்தாதை கூரேசர் இணையடியோன் வாழியே
எழிற் மூங்கிற்குடி விளங்க இங்குவந்தோன் வாழியே
நந்தாமல் எதிராசர் நலம்புகழ்வோன் வாழியே
நம் மதுரகவி நிலையை நண்ணினான் வாழியே
பைந்தாம அரங்கர்பதம் பற்றினான் வாழியே
பங்குனியில் அத்தநாள் பாருதித்தோன் வாழியே

அந்தாதி நூற்றெட்டும் அருளினான் வாழியே
அணியரங்கத்து அமுதனார் இணையடிகள் வாழியே

## எம்பார்

பூவளரும் திருமகளார் பொலிவுற்றோன் வாழியே
பொய்கைமுதல் பதின்மர்கைலப் பொருளுரைப்போன் வாழியே
மாவளரும் பூதூரான் மலர்ப்பதத்தோன் வாழியே
மகரத்தில் புனர்பூசம் வந்துதித்தோன் வாழியே
தேவும் அப்பொருள் படைக்கத் திருந்தினான் வாழியே
திருமலை நம்பிக்கு அடிமை செய்யுமவன் வாழியே
பாவையர்கள் கலவியிருள் பகலென்றான் வாழியே
பட்டர் தொழும் எம்பார் பொற்பதம் இரண்டும் வாழியே

## பட்டர்

தென்னரங்கர் மைந்தன் என சிறக்க வந்தோன் வாழியே
திருநெடுந்தாண்டகப் பொருளைச் செப்புமவன் வாழியே
அன்னவயல் பூதூரான் அடிபணிந்தோன் வாழியே
அனவரதம் எம்பாருக்கு ஆட்செய்வோன் வாழியே
மன்னு திருக்கூரனார் வளமுரைப்போன் வாழியே
வைகாசி அனுடத்தில் வந்துதித்தோன் வாழியே
பன்னுகலை நால்வேதப் பயன் தெரிவோன் வாழியே
பராசரனாம் சீர்ப்பட்டர் பாருலகில் வாழியே

## நஞ்சீயர்

தெண்டிரைசூழ் திருவரங்கம் செழிக்கவந்தோன் வாழியே
சீமாதவன் என்னும் செல்வனார் வாழியே
பண்டைமறைத் தமிழ்ப்பொருளைப் பகரவந்தோன் வாழியே
பங்குனியில் உத்திர நாள் பார் உதித்தான் வாழியே
ஒண்டொடியாள் கலவிதன்னை ஒழித்திட்டான் வாழியே
ஒன்பதினாயிரப்பொருளை ஓதுமவன் வாழியே
எண்டிசையும் சீர்ப்பட்டர் இணையடியோன் வாழியே
எழில்பெருகும் நஞ்சீயர் இனிதூழி வாழியே

## நம்பிள்ளை

தேமருவும் செங்கமலத் திருத்தாள்கள் வாழியே
திருவரையில் பட்டாடை சேர்மருங்கும் வாழியே
தாமமணி வடமார்வும் புரிநூலும் வாழியே
தாமரைக்கை இணையழகும் தடம்புயமும் வாழியே
பாமருவும் தமிழ்வேதம் பயில்பவளம் வாழியே
பாடியத்தின் பொருள் தன்னைப் பகர்நாவும் வாழியே
நாமநுதல் மதிமுகமும் திருமுடியும் வாழியே
நம்பிள்ளை வடிவழகும் நாள் தோறும் வாழியே

காதலுடன் நஞ்சீயர் கழல்தொழுவோன் வாழியே
கார்த்திகைக் கார்த்திகை உதித்த கலிகன்றி வாழியே
போதமுடன் ஆழ்வார் சொற்பொருள் உரைப்போன் வாழியே
பூதூரான் பாடியத்தைப் புகழுமவன் வாழியே
மாதகவால் எவ்வுயிர்க்கும் வாழ்வளித்தான் வாழியே
மதிளரங்கர் ஓலக்கம் வளர்த்திட்டான் வாழியே
நாதமுனி ஆளவந்தார் நலம் புகழ்வோன் வாழியே
நம்பிள்ளை திருவடிகள் நாள் தோறும் வாழியே

## வடக்குத்திருவீதிப்பிள்ளை

ஆனிதனில் சோதி நன்னாள் அவதரித்தான் வாழியே
ஆழ்வார்கள் கலைப்பொருளை ஆய்ந்துரைப்போன் வாழியே
தானுகந்த நம்பிள்ளை தாள்தொழுவோன் வாழியே
சடேகாபன் தமிழ்க்கு ஈடு சாற்றினான் வாழியே
நானிலத்தில் பாடியத்தை நடத்தினான் வாழியே
நல்ல உலகாரியனை நமக்களித்தான் வாழியே
ஈனமற எமையாளும் இறைவனார் வாழியே
எங்கள் வடவீதிப்பிள்ளை இணையடிகள் வாழியே

## பிள்ளைலோகாசார்யர்

அத்திகிரி அருளாளர் அனுமதியோன் வாழியே
ஐப்பசியில் திருவோணத்து அவதரித்தான் வாழியே
முத்திநெறி மறைத்தமிழால் மொழிந்தருள்வோன் வாழியே
மூதரிய மணவாளன் முன்பு உதித்தான் வாழியே

நித்தியம் நம்பிள்ளைபதம் நெஞ்சில் வைப்போன் வாழியே
நீள்வசன பூடணத்தால் நியமித்தான் வாழியே
உத்தமமாம் முடும்பைநகர் உதித்தவள்ளல் வாழியே
உலகாரியன் பதங்கள் ஊழி தொறும் வாழியே

## கூரகுலோத்தம தாசர்

சந்ததமும் ஆழ்வார்கள் தமிழ் வளர்த்தோன் வாழியே
தாரணியில் சிறு நல்லூர் தானுடையோன் வாழியே
எந்தை உலகாரியனை இறைஞ்சுமவன் வாழியே
இலகு துலா ஆதிரையில் இங்கு உதித்தோன் வாழியே
இந்த உலகத்தோர்க்கு இதமுரைத்தோன் வாழியே
எழில் வசனபூடணத்துக்கு இனிமை செய்தான் வாழியே
குந்திநகர் சிந்தைகொண்ட செல்வனார் வாழியே
கூரகுலோத்தமதாசர் குரைகழல்கள் வாழியே

## திருவாய்மொழிப்பிள்ளை

வையகமெண் சடேகாபன் மறைவளர்த்தோன் வாழியே
வைகாசி விசாகத்தில் வந்துதித்தான் வாழியே
ஐயன் அருண்மாரி கலை ஆய்ந்துரைப்போன் வாழியே
அழகாரும் எதிராசர் அடிபணிவோன் வாழியே
துய்ய உலகாரியன் தன் துணைப்பதத்தோன் வாழியே
தொல்குருகாபுரி அதனைத் துலக்கினான் வாழியே
தெய்வநகர் குந்திதன்னில் சிறக்கவந்தோன் வாழியே
திருவாய்மொழிப்பிள்ளை திருவடிகள் வாழியே

## மணவாள மாமுனிகள்

இப்புவியில் அரங்கேசர்க்கு ஈடளித்தான் வாழியே
எழில் திருவாய்மொழிப்பிள்ளையிணை அடியோன் வாழியே
ஐப்பசியில் திருமூலத்தவதரித்தான் வாழியே
அரவரசப் பெருஞ்சோதி அனந்தனென்றும் வாழியே
எப்புவியும் ஸ்ரீசைலம் ஏத்த வந்தோன் வாழியே
ஏராருமெதிராசர் எனவுதித்தான் வாழியே
முப்புரிநூல் மணிவடமும் முக்கோல் தரித்தான் வாழியே
மூதரிய மணவாள மாமுனிவன் வாழியே

**திருநாள் பாட்டு**

செந்தமிழ் வேதியர் சிந்தைதெளிந்து சிறந்து மகிழ்ந்திடு நாள்
சீருலகாரியர் செய்தருள் நற்கலை தேசுபொலிந்திடு நாள்
மந்தமதிப் புவிமானிடர் தங்களை வானிலுயர்திடு நாள்
மாசறுஞானியர் சேரெதிராசர்தம் வாழ்வு முளைத்திடு நாள்
கந்தமலர் பொழில்சூழ் குருகாதிபன் கலைகள் விளங்கிடு நாள்
காரமர்மேனி அரங்கர்நகர்க்கிறை கண்கள் களித்திடு நாள்
அந்தமில்சீர் மணவாளமுனிப்பரன் அவதாரம் செய்திடு நாள்
அழகு திகழ்ந்திடும் ஐப்பசியில் திருமூலம் அதெனு நாளே

**** ஸ்ரீமதே ரம்யஜாமாத்ரு முநீந்த்ராய மஹாத்மநே |
ஸ்ரீரங்கவாஸிநே பூயாத் நித்யஸ்ரீர் நித்ய மங்களம் ||

**வேங்கடகுரவே நம:**
**அண்ணாவிலப்பன் திருவடிகளே சரணம்**
**ஸ்ரீ முதலியாண்டான் ஸ்வாமி திருவடிகளே சரணம்**
**ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்**

___________